பாதிக்கப்பட்டாலும்கூட, அதற்கு பல்வேறு விதிமுறைகள் இருக்கின்றன. வனத் துறை அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். கடுமையான முயற்சிகள் மேற்கொண்டு, ஒரு வேளை வனத் துறையிடமிருந்து அதற்கான அனுமதியைப் பெற்றாலும்கூட, அதனை அமைக்க மூன்று மடங்கு கூடுதலாகவும் செலவாகிறது. செலவு கூடுதலாக ஆனாலும்கூடப் பிரச்சினையில்லை. வனத் துறையிடமிருந்து அனுமதி வாங்குவதிலே பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால்தான், அப்படிப்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதிலே பிரச்சினை ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், மத்திய வனத் துறையினுடைய அனுமதியைப் பெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும், அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மின் கம்பிகள் அவ்வப்போது ஏற்படுகின்ற இயற்கைச் சீற்றத்தினால் பழுதுபட்டாலும்கூட, அதை உடனடியாக சரிசெய்வதற்கு வேண்டிய முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 360, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

360—

புறவழிச் சாலை

***37749—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவினாசி தொகுதி, திண்டுக்கல்—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை எண் 209—ல் உள்ள அன்னூர் நகருக்குப் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அன்னூர் நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.*

திரு. ஏ.ஏ. கருப்பசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை பணிந்து வணங்கி, என்னுடைய கேள்வியைத் தொடங்குகிறேன். கோவையிலிருந்து திண்டுக்கல், பெங்களூரு, ஊட்டி, மேட்டுப்பாளையம், ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் வழியாகச் செல்லும் தேசிய நெடுஞ்சாலை எண் 209-ல், அவினாசி தொகுதியில் ரூபாய் ஒரு கோடியே 75 இலட்சம் மதிப்பில் பாலம் கட்டப்பட்டு, அது மக்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்டதற்காக அவினாசி தொகுதி மக்கள் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அன்னூர் சாலையில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், பொதுமக்கள் வேண்டுகோளை ஏற்று, அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைத்துத் தரப்படும் என்று அறிவித்ததற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், அத்துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும், கோடானுகோடி நன்றியைத் தெரிவிக்கும் அதே வேளையில், அந்தச் சாலையில் அதிகமாகச் செல்லக்கூடிய அனைத்து மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.*

2015 செப்டம்பர் 28]

டாக்டர் த. ஹரிதாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்து காக்கின்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களே, தங்கள் பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது தொகுதிக்கு தொழிற்பயிற்சிக் கூடம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி, எனது கோரிக்கையை வைக்கிறேன். திண்டிவனம் நகரின் தென்புறமாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்களின் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திண்டிவனத்தில் ஒரு புறவழிச் சாலை இருக்கின்றது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கூடுதலாக புறவழிச் சாலை வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வில் அங்கே அதிகமாக போக்குவரத்து நெரிசல் இருப்பது கண்டறியப்பட்டால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். சேலம் மாவட்டத்தில் அயோத்தியாப்பட்டினம் முதல் அரூர் வழியாக ஊத்தங்கரை, திருப்பத்தூர், வாணியம்பாடி வரை ஆறுவழிச் சாலையினை இணைக்கின்ற 124.8 கி.மீ சாலை மாநிலச் சாலையாக உள்ளது. இந்தச் சாலையிலே திருவண்ணாமலை கோயிலுக்குச் செல்கின்றவர்கள், திருப்பதி கோயிலுக்குச் செல்கின்றவர்கள் மற்றும் சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களிலிருந்தும்*

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்குச் செல்லும் வாகனங்கள் மற்றும் சரக்கு வாகனங்களின் போக்குவரத்து அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தினால், இந்தச் சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்றும், அதே நேரத்தில் தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு வாய்ப்பில்லை என்றால், நம்முடைய மாநில அரசின் மூலமாக அதை நான்கு வழிச் சாலையாக அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலையை TNRSP திட்டத்தின் மூலமாக விரிவுபடுத்துவது தொடர்பான கருத்துரு அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, ஏழைகளின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழும் வள்ளலாய் வாழ்ந்துகொண்டிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். எனது துறையூர் தொகுதி, துறையூர் நகரப் பகுதியிலிருந்து அதிகப்படியான போக்குவரத்து வாகனங்களும், கனரக வாகனங்களும் செல்வதாலும், சாலையின் இருபுறங்களிலும் அதிகமான கடைகள் இருப்பதாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, பெரம்பலூர் சாலையையும், ஆத்தூர் சாலையையும் இணைக்கின்ற வகையிலே, அங்கே ஒரு புறவழிச் சாலை அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

2015 செப்டம்பர் 28]

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர்—ஆத்தூர் சாலையை இணைக்கின்ற விதத்திலே அங்கே புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்று இங்கே ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அந்த ஆய்விலே அதிக போக்குவரத்து நெரிசல் இருப்பது கண்டறியப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப அங்கே புறவழிச் சாலை அமைப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நான்குவழிச் சாலை அமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தற்போது அந்த நிலங்களுக்குக் குறிப்பிட்டிருக்கக்கூடிய தொகை மிகக் குறைவாக உள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான விலையைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய ஏற்பாடுகள் செய்து தர முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சாலை தேசிய நெடுஞ்சாலை என்று கருதுகிறேன். அது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினால், மைய அரசிடம் வலியுறுத்தி, அதைப் பெற்றுத் தருவதற்குண்டான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு முதற்கண் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதிக்குட்பட்ட ஆற்காடு நகரப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைக்கான நிலம் கையகப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.1 கோடியே 46 இலட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அந்தச் சாலையைப் புதுப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு பகுதியில் புறவழிச் சாலை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கருத்துரு கேட்டிருக்கிறார்கள். அங்கே புறவழிச் சாலை அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது. அந்த நிலம் கையகப்படுத்தும் பணி முடிவுபெற்று, DPR தயாரிக்கும் பணிகளும் அங்கே நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நிறைவுபெற்ற பிறகு, புறவழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 361, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

361—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***50700—திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—